# தமிழகத்தில் தட்சிணாமூர்த்தியும் பத்மபாணி அவலோகிதரும்

டாக்டர் நா. கணேசன், ஹ்யூஸ்டன்

## பதுமக்கொத்தர், கொத்தாண்டி யார்?

தி. நா. இராமச்சந்திரனின் நாகப்பட்டினப் பௌத்தப் படிமங்கள் என்னும் புகழ் படைத்த புத்தகத்தால் 10-13 நூற்றாண்டு எழுத்துக்களில் சிலைகளைப் பௌத்த தேவதானமாகக் கொடுத்தவர் பெயர் தமிழில் எழுதி உள்ளமை தெரிகிறது. உலகநாதன், கவராண்டி தேவர், கொத்தாண்டி தேவர் என்று சில பேர்கள். கொத்தாண்டி என்றால் பொருள் என்ன? என்று பார்ப்போம்.

உலகநாதன் என்னும் தெய்வப் பெயர் புரிகிறது. லோகநாதன், லோகேசுவரன் என்ற பேர்கள் அவலோகிதேசுவரனுக்கு இந்தியா, தென்கிழக்கு ஆசியாவில் சாதாரணமாக வழங்கின. சோழ ஸ்தபதிகளால் செய்த ஒரு புத்தர், இரு லோகநாதர் சிலைகள் மேலைக் கடற்கரை மங்களூரில் உள்ளன. இவற்றில் ஒன்றன் பீடத்தில் கி.பி.968 ஆம் ஆண்டுக்குச் சமானமான தேதி குறிக்கப்பட்டுள்ளது.

கவராண்டி - கேரள அம்பலங்களில் ஒருதண்டில் ஆரம்பித்து மூன்று கிளையாய்ப் பிரியும் விளக்கைக் கவரவிளக்கு என்பார்கள். மகாயான பௌத்தத்தில் புத்தர் பிரானுக்கு இடப்பக்கம் வஜ்ரபாணியும், வலப்பக்கம் பத்மபாணியும் அமைப்பது வழக்கம். வச்சிரம் இந்திரனின் ஆயுதம். ஒரு திரிசூலம் போன்ற அமைப்பில் ஆரம்பித்து வஜ்ரம் மிக வளர்ந்த நிலையில் இருபுறமும் கிளைகள் உடையதாகவும் அமைவதுண்டு. கவராண்டி - வச்சிரபாணி என்னும் போதிசத்துவர். உதாரணமாக, ஒரு வஜ்ரபாணி சிற்பம். கையில் உள்ள திரிசூலம் (இரு முனையிலும்) போன்ற வஜ்ரம் காண்க:
http://www.asianart.com/articles/phagpa/figure20.html

மலையாண்டி (முருகன்), முனியாண்டி (பல இடங்களில் சாக்கிய முனியின் உருவை இப்படிச் சொல்வதுமுண்டு), பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளை விருமாண்டி, மாயாண்டி, பேயாண்டி என்பது போல - போதி சத்துவர்களில் முக்கியமான இருவருக்கு - வச்சிரபாணி, பத்மபாணி இவர்களை முறையே கவராண்டி,

*கொத்தாண்டி என்னும் செந்தமிழ்ப் பெயர்களால் அழைத்துள்ளனர். ஆண்டி என்றால் தெய்வம், துறவி.*

*அஜந்தா போன்ற இடங்களில் உள்ள பத்மபாணி அவலோகிதரைத் தெரிந்திருப்பீர்கள். கொத்தாண்டி என்பது இவரைத்தான் என்று கருதுதற்கான சான்றுகளைக் காண்போம். பொதிகை மலையில் முருகன் அல்லது சிவன் தமிழை அகத்தியருக்குக் கற்பித்ததாகப் பல தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம். ஆனால், புத்தமித்திரனார் செய்த வீரசோழியம் பொதியமுனி அகத்தியனுக்குத் தமிழ் கற்பித்தது அவலோகிதேசுவரன் என்று இரண்டு பாடலில் சொல்கிறது*(1)*. சைவர்கள் தமிழைப் போதித்தது சிவபிரான் என்று ஒருபுறம் சொல்ல, பௌத்தர்கள் தமிழைப் போதித்தது போதிசத்துவ அவலோகிதன் என்று தம் கடவுளருக்கு உரிமை கொண்டாடினர். இவ் வழக்கு வடமொழியிலும் உள்ளது. சோழ நாட்டில் வாழ்ந்த ஹரதத்த சிவாச்சாரியர் (பத்தாம் நூற்றாண்டு?) சிவன் பாணினிக்குக் கற்பித்தார் என்று சொல்கையில், ரூபாவதாரம் என்னும் இலக்கண ஆசிரியர் பாணினிக்கு இலக்கணம் கற்பித்தவர் அவலோகிதர் என்பார். ரூபாவதாரம் தமிழ்நாட்டிலோ, இலங்கையிலோ எழுதப்பெற்ற நூலாகும். தமிழகத்தில் பரவலாக ரூபாவதாரம் கற்பிக்கச் சோழர்கள் நிவந்தங்கள் கொடுத்தனர்.*

*ஒட்டக்கூத்தர் சோழர் அரசவையில் பேரரசர் கவிச்சக்கிரவர்த்தி என்று பட்டங் கட்டி மரியாதை செய்த போது பாடிய இரண்டு பாடல்கள் உள்ளன. அற்புதமான எண்சீர் விருத்தம் அவை. அதில் ஒன்று சந்தவிருத்தம்*

இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்
    றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
    திருக்கைப் பங்கயம் சிறக்கத் தந்தன
படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
    பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
    கவிக்குப் பஞ்சரம் கவிக்கத் தொங்கலே.

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
    பைம்பொற்றா ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
    வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மானா பரணா

முத்துப்பந் தரினிற்குந் குருளைக்கும் சினவேல்
    முருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்கும் சடிலக்குந் தளருக்கும் அல்லாற்
    கூழைத்தண் டமிழற்கேன் கொடியுங் காளமுமே.

குறுமுனி அகத்தியனுக்கும் அவனுக்குத் தமிழ் கற்பித்த நான்கு ஆசான்களுக்கும் அல்லாமல் தனக்கேன் இவ்வளவு பெருமை என்று தன்னடக்கத்துடன் கூத்தர் கேட்கிறார். நடுவில் பொதியமுனிவர். ஒருபக்கம் முருகன், அவன் அவதாரம் ஆன சம்பந்தர். அகத்தியனுக்கு இன்னொரு புறத்திலோ சிவபெருமான், அவன் அவதாரம் ஆன அவலோகிதன். அந்தக் கொத்தாண்டியைப் பத்மக் கொத்தன் என்று மேற்கண்ட பாட்டில் பாராட்டுகிறார்.

## தட்சிணாமூர்த்தி, அவலோகிதேசுவரர் உறவுகள்

முதன் முதலாகத் தமிழில் ஒட்டக் கூத்தர்தான் சமணரை வென்ற சம்பந்தர் சூரனை அழித்த முருகனின் அவதாரம் என்று தம் தக்கயாகப் பரணியில் பாடுபவர் (2). சம காலத்தவரான சேக்கிழாரில் முருகன் அவதாரம் சம்பந்தர் என்ற கொள்கையைக் காணவில்லை. சடாபாரந் தாங்கி, இளமைக் கோலத்துடன் கல்லால மர நிழலில் தக்கிணாமூர்த்தி ஆகிய சிவபிரான் அகத்தியர் போன்ற ருஷிகளுக்கு ஞானம் அளிக்கிறார் என்பது சைவக் கொள்கை. சடிலக் குந்தளர் இந்தத் தக்கிணா மூர்த்தி சிவபெருமான். முக்கியமாக, தட்சிணாமூர்த்தியைத் தமிழகக் கோவில்களில் மாத்திரம் காணமுடிகிறது. "அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் சொன்னானை, அகத்தியனை உகப்பானை" - தேவாரம். சில்ப சாத்திரங்களில் தக்கிணாமூர்த்தியைத் தென்கோட்டங்களில் வைக்க விதி இருக்கிறது (டி. ஏ. கோபிநாதராயர்). சிவன் கோவில்களில் மட்டுமன்றி வைணவக் கோவில்களிலும் தென்கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தியைத் தமிழகத்தில் காணலாம். திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வாரும் தக்கிணாமூர்த்தியைப் பாசுரம் பாடுகின்றனர் (3). பதுமக் கொத்தன் என்று கூத்தமுதலியார் சொல்வது யாரை என்று இப்போதுதான் விளங்கிற்று, பல பதிப்பாசிரியரும் இவர் யார் என்று சொல்லாதே விட்டனர். பத்மபாணி அவலோகிதரைப் பௌத்தக் கலை வரலாற்று நூல்களால் தெரிந்து கொள்ள முடிந்தது.

சிவபெருமானைத் தாமரைமலருடன் தொடர்புபடுத்தித் தேவாரத்தில் வரும் சில பாடல்களைக் காண்போம். தேவாரத்துக்குப் பண்டை உரை இல்லையாதலால் பொருளை யூகிக்க வேண்டியுள்ளது. இப்பாடல்களில் பதும மலரைத் தாங்கும் அவலோகிதன் சிவபிரானின் ஒரு வடிவம்

(அல்லது) அவதாரம் என்று தேவார குரவர் கொள்கின்றனர் என்றும் தேரலாம். சமண சமயக் கடவுள் வர்த்தமானர் சிவபிரானே என்றும் தேவாரத்தில் உண்டல்லவா?

*புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுணம் அமர்நெறி*
*திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும் உயிரவை அவைதம*
*பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய*
*சிவனது சிவபுர நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே*
(தேவாரம் 1.21.1)

*சூதகஞ்சேர் கொங்கையாளோர் பங்கர் சுடர்க்கமலப்*
*போதகஞ்சேர் புண்ணியனார் பூத கணநாதர்*
*மேதகஞ்சேர் மேகமந்தண் சோலையில் விண்ணார்ந்த*
*சாதகஞ்சேர் பாளைநீர்சேர் சண்பை நகராரே*
(தேவாரம் 1.66.2)

தேசனைத் தேசம் ஆகுந் திருமாலோர் பங்கன் தன்னைப்
பூசனைப் புனிதன் தன்னைப் *புணரும் புண்டரிகத்தானை*
நேசனை நெருப்பன் தன்னை நிவஞ்சகத் தகன்ற செம்மை
ஈசனை அறிய மாட்டேன் என்செய்வான் தோன்றினேனே
(தேவாரம் 4.78.7)

*விண்ணிரியுந் திரிபுரங்கள் எரிய வைத்தார்*
*வினைதொழுவார்க் கறவைத்தார் துறவிவைத்தார்*
*கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்*
*கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார்*
*திண்ணெரியுந் தண்புனலும் உடனே வைத்தார்*
*திசைதொழுதும் இசையமரர் திகழ்ந்து வாழ்த்தி*
*நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்*
*நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே*
(தேவாரம் 6.14.5)

வச்சிரபாணி தோன்ற அடிப்படை மாதிரிகளாக இந்திரனின் குண நலங்களும் ஆயுதங்களும் துணைநின்றன. அதுபோல, ஆரம்ப காலத்தில் அவலோகிதனைத் தாமரை மலரில் தங்கும் பிரமனை மாதிரியாகக் கொண்டு அமைத்தனர் என்பது சில பௌத்த வரலாற்று ஆசிரியர் கொள்கை (4). காந்தாரத்தில் தாமரைப்பூ தாங்கும் யட்ச அடியார் பத்மபாணி உருவாக்கத்திற்குக் காரணம் என்பார் ஆனந்த குமாரசுவாமி. பத்மபாணியின் தோற்றம் யக்ஷனோ, பிரமனோ எதுவாயினும் குப்த அரசர் காலத்தில் அவலோகிதர், மைத்ரேயர் இருவருக்கும் பிரமனின்

குணாம்சங்கள் ஏற்றப்படுகின்றன. பின் சில நூற்றாண்டுகள் கழிந்து அவலோகிதர் சிவபெருமானின் அவதாரமாகிறார். சைவத் தாக்கம் முக்கியமாகத் தென்னாட்டில் நிகழ்ந்து பின்னர் இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குப் பரவியிருக்கவேண்டும் வேண்டும் என்பர் லோகேஷ் சந்திரா போன்ற அறிஞர் (5).

தாமரைப் போதக மலர் சேரும் ஈசர் என்பது போலும் தொடர்கள் தேவாரத்தில் வருவது அவலோகிதப் போதிசத்துவருக்கு மிகப் பொருந்துகிறது. சிவபெருமானின் காமதகன மூர்த்தி வடிவம் கலையுலகில் மாரன்(காமன்) புத்தரின் துறவறத்தைக் கலைக்க முயலும் சிற்பங்களைப் பார்த்து உருவானது என்பர். காஞ்சி ஏகாம்பரேசர் கோவிலில் இருந்த "மன்மதன் துறவியாம் புத்தரைத் தாக்குதல்" சிற்பம் இன்றும் பாரிசு தொல்பொருளகத்தில் உள்ளது. "காமனைப் பொடியா வைத்தார், கடிக் கமல மலர் வைத்தார், கயிலை வைத்தார்" எனத் தேவாரத்தில் வருவது, "வலிசேர் கயிலையும் பொதியிலும் இடம் என உடையார்" (தேவாரம் 1.79.1) என்னும் தொடரை நினைவூட்டும். 'பொற்கோட்டு இமயமும் பொதியிலும்' புறநானூற்று வாசகம் போல, தேவாரத்தில் தென்மலை-வடமலை ஈசர்கள் ஒன்றாகக் கோக்கப் பட்டுள்ளனர். காமதகனனைச் சொல்லிக், கமல மலர் வைத்தார் என்று பத்மபாணியையும், அவனது பொதியிலைக் குறிப்பிட்ட பின்னர், கயிலையைப் பாடுகிறார் என்று பொருள்கொள்ள இடம் உண்டு. இதுபோலவே, "செந்தாமரைப் போது அணிந்தான் கண்டாய், சிவன் கண்டாய், தேவர் பெருமான் கண்டாய்" (தேவாரம் 6.73.3) என்னும் தேவாரத்தில் செந்தாமரையைக் கையணியாகக் கொண்ட அவலோகிதன் சிவனின் ஓர் அமிசமே எனலாம்.

சில்ப சாத்திரங்களும், கோவில் சிற்பங்களும் அவலோகிதன், தக்கிணாமூர்த்தி தொடர்பு மூலங்களைக் காட்டுகின்றன. அவற்றில் சிலவற்றை ஆராய்வோம். பாண்டியர் செப்பேடுகளில் அகத்தியனைக் குல குருக்களாகக் கொண்டொழுகினோர் என்னும் செய்தி இருக்கும். காளிதாசனின் இரகுவம்மிசத்தில் அகத்தியனின் சிஷ்யன் பாண்டியன் என்றுள்ளது. "தென்வரை இருந்த சீர்சால் முனிவரன்" என்று புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும், பொதியில் முனிவன் என்று அகத்திய விண்மீனைப் பரிபாடலும் பாடுகின்றன. சின்னமனூர் வேள்விக்குடிச் செப்பேடுகளில் "பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது பாண்டியர் திருக்குலம்" என்றும், "தென்வரைமிசைக் கும்போத்பவனது தீந்தமிழ் செவி கழுவியும்" என்றும் வருகிறது. பாண்டிக்கோவையில் "பண்டு அகத்தியன் வாய் உரைதரு தீந்தமிழ் கேட்டோன் உசிதன்" என்றிருக்கிறது. தென்வரை

ஆகிய பொதிய மலையில் அகத்தியனுக்குத் தமிழ் போதித்தது அவலோகிதர் என்ற பௌத்தமதக் கொள்கை பரவலாகச் சோழர் காலத்தில் விளங்கிற்று என்பது தீவிர சைவர், கவிராக்ஷசர் ஆன ஒட்டக்கூத்தர் பாடலாலும், பௌத்த சமயத்தார் புத்தமித்திரனார் பாடல்களைக் கொண்டும் நிறுவ இயலும். தென்னாட்டுச் சைவர்கள் கயிலாயத்தைத் தொழுததுபோல, வடநாட்டுப் பௌத்தர்கள் அவலோகிதன் வாழ்வது தென்னாட்டுப் போதலகிரி என்று காலங்காலமாகக் கோட்பாடு கொண்டுள்ளனர். அவலோகிதரின் சிவபெருமான் உடனான தொடர்புகள் கலைப் படிமங்களாலும், இலக்கியங்களாலும் பரவலாகத் தெரிய வருகிறது. உதாரணமாக மங்களூரில் உள்ள அவலோகிதர் சிலையில் நெற்றிக் கண் இருக்கிறது. ஈழ நாட்டில் மற்றும் தென்கீழ் ஆசியாவில் உள்ள அவலோகிதர்களுக்குப் பெரும்பான்மையும் புலித் தோலாடை அரையில் கட்டப்பட்டுள்ளது. குப்தர் கால அவலோகிதர் சிலைகளில் கருமான் தோலாடை அணிந்திருக்கக் காண்கிறோம். இஃது மலர் அயனின் அம்சங்களில் ஒன்று. இப்பண்பு தென்னிந்தியா, இலங்கை, தென்கிழக்காசியாவில் பல்லவர் காலம் முதற்கொண்டு சிவாம்சமாக - புலித்தோலாடையாக மாறுகிறது. இலங்கை, தமிழகம், தென்கிழக்காசியா கலைப் படிமங்களில் பல்லவர் காலம் முதற்கொண்டு அவலோகிதர்மேல் சிவாமிசங்கள் பல படிவதைப் பார்க்கிறோம்.

சமகாலக் கலையில் காட்டும் சிவன் - அவலோகிதன் தொடர்புகள் இலக்கியத்திலும் பிரதிபலிக்க வேண்டுமே! முதலில் கிருஷ்ணா நதிதீரத்தில் இருந்த பல்லவ மன்னர்கள் பலருக்குப் பௌத்த சமயப் பெயர்கள் வழங்கி இருக்கின்றன. பின்னர் தொண்டை மண்டலத்தைப் பல்லவர் ஆண்டனர். தொண்டை நாட்டின் பண்டைச் சிவன்கோவில் விமானங்கள் யானை படுத்திருந்தாற் போல் இருக்கும். அத்திப்புட்டம் அல்லது கஜப்பிருஷ்ட விமானம் என்பர். இவற்றுக்கு முன்மாதிரியாய் பௌத்த சைத்தியங்கள் அமைந்தன. புத்தரின் போதிமரம் அரசமரம், அதுபோல் திருமூலர் ஆலமரத்தைச் சிவபோதி என்றழைப்பார். தேவாரம் பாடியவர்கள் பல்லவர் காலத்தவர். ஏற்கெனவே குறித்த "கடிக்கமல மலர் வைத்தார்", "சுடர்க் கமலப் போதகஞ்சேர் புண்ணியனார்" "செந்தாமரைப் போது அணிந்தான் கண்டாய்" போன்ற தேவாரத் தொடர்கள் அத்தகைய அவலோகிதர்-சிவனார் தொடர்புகளைச் சுட்டிக் காட்டுகின்றன. சிவபிரான் தலையில் தாமரை மலர் அணிவதாகத் தேவாரத்தில் தகவல் இல்லை. ஆனால், தட்சிணாமூர்த்தி வடிவங்கள் கடக ஹஸ்த முத்திரையுடன் அமைக்கப்பட வேண்டும் என்ற சிற்பாகம விதியுண்டு. தாமரைப் பூவைக் கையில் பிடிக்க ஏற்ற முத்திரை அது. காசியப சில்ப சாத்திரம்

போன்ற நூல்களில் தாமரை மலர் தக்கிணாமூர்த்தி கையினில் விளங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தென்னகத்திலும், ஈழத்திலும் கடக ஹஸ்த முத்திரையுடன் பல தட்சிணாமூர்த்தி, அவலோகிதர் பிரதிமைகள் உள. உதாரணமாகத் தொண்டை நாட்டுத் தக்கோலத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி உருவம் கடக ஹஸ்தம், ராஜலீலாசனம், தொங்கும் காலருகே மான் போன்றவையுடன் இலங்குகிறது. தியானமூர்த்திகளின் அடியில் மானை அமைப்பது மிகப்பழைய பௌத்தக் கலைமரபு.

## அவலோகிதன் வாழ் பொதல/போதல மலை

வி. வெங்கையர், தி. நா. இராமச்சந்திரன் போன்ற சிற்பக்கலை வல்லுநர்கள் பௌத்த நூல்கள் அவலோகிதன் வாழ்வதாகச் சொல்லும் போதல மலை பொதியம், பொதியில், பொதிகை ஆகிய மலையம் என்று ஆராய்ந்து எழுதியுள்ளனர். இதனை உயர்திரு உ.வே.சா. அவர்கள் புறநானூற்றுப் பதிப்பிலும் குறிப்பிட்டுள்ளார்கள்: “பொதியில் மலைச்சந்தனம்” என்னும் அரும்பதவகராதிப் பதிவில் “இம்மலை போதல என்றும் போதகை என்றும் பூர்வ காலத்தில் கூறப்பட்டுள்ளது. அவலோகிதேசுவரன் என்னும் பௌத்தமுனி இம்மலையின் மீது இருந்ததாகச் சொல்வதுண்டு (ராவ்பகதூர் வி. வெங்கையரவர்கள் எழுதியது).” (உவேசா, புறநானூறு, பக்கம் 657, 1963).

மேலைநாட்டுக் கலை, வரலாற்றாசிரியர்கள் D K. Dohanian, J. C. Holt, .. போன்றோர் ஆய்வு நூல்களாலும், கட்டுரைகளாலும், ஈழத்தில் கிடைக்கும் 7-8 நூற்றாண்டு மகாயான பௌத்த அவலோகிதர் சிலைகள் பல்லவர் கலையின் தாக்கத்தால் விளைந்தவை என்பதைத் தெளிவு படுத்தியுள்ளனர். முக்கியமாக, ராஜலீலாசனம் இட்டு ஒரு காலை மடக்கி எழுந்தருளும் தட்சிணாமூர்த்தி, அய்யனார் சிலைகளின் பல்லவ கலைப்பாணிக்கும், அவலோகிதர் பல்லவ மற்றும் இலங்கைப் படிமங்களுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகிறார்கள்(6). பல்லவர் கால அவலோகிதர்கள் ஆந்திராவிலும் தமிழகத்திலும் கிடைத்துள்ளன. அவலோகிதன் இந்தியாவின் தென் கோடியில் பெரிய கடலருகே உயர்ந்த பொதல மலையில் வாழ்வதாக மகாயான சூத்திரத்தில் ஒன்றான கண்டவியூகம் பேசுகிறது. கண்டவியூக சூத்திரத்தில் சுதனன் என்னும் தனவைசிய இளைஞன் சென்று சந்திக்கும் கல்யாணமித்திரர் வதியும் தலங்கள் மொத்தம் 54. அவற்றில் சுமார் 15 தலங்கள் தென்னிந்தியாவில் உள்ளன. அவற்றை இடப்பெயர் ஆய்வு, கல்வெட்டுக்கள், பண்டைத் திராவிட இலக்கியம் இவை

கொண்டு ஆராய்தல் தென்னிந்திய வரலாற்று அறிஞர் கடமை. டாக்டர் சி. மீனாக்ஷி 1940-ல் கண்டவியூகத்தை நன்கு ஆராயவேண்டும் என்றெழுதினார்(7). அத்திட்டம் இன்னும் நிறைவுறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். உதாரணமாக வசுமித்திரா என்னும் கல்யாணமித்திரையின் தலம் பொன்னும் மணியும் கிடைக்கும் கொல்லிமலை, சங்க இலக்கியங்கள் கூறும் கொல்லிப்பாவைக்குப் பொருத்தமாகும். மேகன் என்னும் இலக்கணாசிரியரிடம் சுதனன் வஜ்ரபுரம் ஆகிய திரமிட பட்டினத்தில் கற்றான் என்பது பூம்புகாரைக் (அல்லது காஞ்சி?) குறிக்கும். கண்டவியூகத்தில் வரும் கல்யாணமித்ரத் தலங்களை ஆய்தல் தென்னாட்டறிவர் கடன்.

கண்டவியூகத்தில் பாரத நாட்டை வலம்புரியாகச் சுதனன் என்னும் வணிக இளைஞன் வலம் வருகிறான். அதில் தென்கோடியில் மலைமீது மணிகள் பொருந்திய பொதலமலை என்னும் உயர்ச்சியான மலையில் அவலோகிதரைச் சந்திக்கின்றான். அம்மலை கடலருகே உள்ளது என்னும் குறிப்பும் பொதலா என்பது பொதியில் மலைதான் என்று கொள்ள அரிய சான்றாக விளங்குகிறது. சுதன செட்டியார் செல்லும் கல்யாணமித்திரத் தலங்கள் இந்தியாவில் பிரதட்சிணமாக அமைவதாலும், பொதல மலையின் தெற்கே ஒரே ஒரு தலம் (குமரிமுனை?) மட்டும் சொல்லப் படுவதானாலும் இதனை உணர்கிறோம். பொதல மலைக்கு அப்புறம் அங்கே சென்று சிவ மகாதேவரைச் சந்தித்த பின்னர் தெற்கே நோக்கி வந்த சுதனன் மீண்டும் வடக்கே பிரயாணிக்கத் தொடங்கி விடுகிறான்.

போதல மலை என்பது காஞ்சிக்குத் தெற்கே மலைக்கூட நாட்டில் உள்ளது என்று மலயநாட்டைக் குறிப்பிடுகிறார் யுவான் சுவாங். அவர் பொதலா மலையில் அவலோகிதன் இருப்பிடத்தை மணிமண்டபம் என்பார்(8). யுவான்சுவாங்கின் பின்வந்த சி-ஷெங் (Chi Sheng, கி.பி. 688-740) பொதலமலை மலைக்கூட நாட்டில் இருப்பதை மீண்டும் எழுதியுமிருக்கிறார். தென்கிழக்கு ஆசியாவின் மன்னன் ஒருவன் ஸ்ரீசைலேந்திர சூடாமணி விகாரம் என்று சோழநாட்டில் கட்டியது போலவே, மலையம்-பொதியில் நிலைபெற்ற மலைக்கூட நாட்டுத் தலைவனால் சோழநாட்டில் கொடைபெற்ற மலைகூட சூடாமணி விகாரம் இருந்திருக்கிறது. தென்பாண்டி மலைய நாட்டில் பிறந்த வஜ்ரபோதி என்பவர் வஜ்ரயான பௌத்த மதப்பிரிவை நிறுவினார்.

யுவான் சுவாங் மணிகள் பொருந்திய மண்டபம் பொதியிலில் உண்டு என்று உரைப்பதை முன்னர்க் கண்டோம். கொங்குவேளிர் பெருங்கதை, சுந்தரர் தேவாரம் இவற்றிலும் இதன் தொடர்பான செய்திகள் உள்ளன.

பெருங்கதையில் பொதியில் மணிகள் பற்றி, "மயிலாடு சிமையப் பொதியிலும் அதன்மிசைக் குளிர்கொள் சந்தனத் தொளிர்மலர்க் காவும் காவின் நடுவண வாவியும் கதிர்மணித் தேவகுலனுந் தென்பால் இலங்கையும்" (பெருங்கதை, ப. 842, 1968) இதனைச் சுந்தரமூர்த்தி நாயனாரும் குறிப்பிடுகிறார். "சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச் சகளி செய்து இறைஞ்சு அகத்தியர் தமக்கு சிந்து மாமணி அணி திருப் பொதியில் சேர்வு நல்கிய செல்வங் கண்டடைந்தேன்" (சுந்தரர் தேவாரம்). வடநாட்டு நூல்களில் தக்ஷிணாமூர்த்தி பற்றிய செய்திகள் அபூர்வம். தமிழகத்துக்கு வடக்கே கோவில்களில் தக்ஷிணாமூர்த்தி வடிவம் காணவியலாது. தமிழ்நாட்டுக் சிவன் கோவில்களில் தக்கிணர் விளங்கும் தென்முகக் கோஷ்டங்களில் ஆந்திர, கன்னட, ஒரியா நாடுகளில் லகுளீசர் இருப்பார். எனவே தான் காசுமீர நாட்டு அபிநவ குப்தரின் மாணவர் மதுராஜ யோகிகள் தம் குருவை தக்கிணாமூர்த்தியின் அவதாரம் என்று போற்றுதல் ஓர் அரிய குறிப்பு. அங்கேயும் மணிகளுடன் பொதியில் தலத்தை வருணித்துள்ளார். இதே போல மாபாரத வனபருவத்தில் அகத்திய முனியின் பொதியில் மலைக்கான குறிப்பிலும் உண்டு (9). அண்மைக் காலத்தில் தென்பாண்டி நாட்டில் சேரன்மாதேவியில் கிடைத்த காசுமீர மன்னன், மற்றும் அவன் மனைவி அளித்த கொடைபற்றிய கல்வெட்டுக்கள் காசுமீரத்திலிருந்து தமிழகம் வந்த தொடர்புகளுக்குச் சான்றாகிறது. அப்போது பொதியமலை தட்சிணாமூர்த்தியைப் பற்றி மதுராஜ யோகிகள் போன்றோர் காஷ்மீர சைவருக்கு அறிவித்திருக்கக் கூடும். காஷ்மீர சைவத்தில் உள்ள தென்னாட்டுக்கே உரிய செய்திகளை ஆய்வறிஞர் வெளிப்படுத்தியுள்ளனர்.

வளர்ந்து நெடிதுயர்ந்த பொதியில்/பொதிகை மலை தென்பாண்டி நாட்டில் உள்ளது. இதற்குத் தென்வரை, தென்னம் பொருப்பு என்றெல்லாம் பெயர். தண்டி தம் காவியாதர்சத்தில் தக்ஷிணாசலம் என்று புகழ்கிறார். பாண்டிய மன்னரின் குலச் சின்னம் ஆனதால், மலயத்வஜ பாண்டியன் மகளார் மீனாட்சி என்பது புராண வழக்கு. "தென்னவன் பெயரிய துன்னருந் துப்பின் தொல் முது கடவுள் பின்னர் மேய வரை தாழ் அருவிப் பொருப்பின் பொருந" என்று மதுரைக் காஞ்சியில் பாண்டிய மன்னனின் பொதியமும் அங்கே வதியும் தட்சிணாமூர்த்தியும் (தென்னவன்) அவரடியார் அகத்தியர் போன்றோரும் குறிப்பிடப்படுவர். இந்தப் பொதியமலைத் தொன்முது கடவுளைக் கொண்டே தக்கிணாமூர்த்தி வடிவம் தமிழகத்தில் மட்டும் பல்லவர், பாண்டியரால் விரிவடைந்திருக்கிறது. வேணாட்டரசன் ஆய் என்பவன் பொதியத்தின் தட்சிணாமூர்த்திக்குத் துகில் போர்த்தனன் என்கிறது சிறுபாணாற்றுப்படை - "கலிங்கம் ஆலமர் செல்வற்கு

அமர்ந்தனன் கொடுத்த சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள் ஆர்வம் நல்மொழி ஆய்". அவலோகிதர் தக்கிணாமூர்த்திக்கு அமைப்பிலும், குணத்திலும் ஒப்புமை பல. இருவரும் பொதியத்தில் தமிழ்முனிக்குக் கற்பித்தனர் என்பது தமிழர் கொள்கை. சிவனைத் "செந்தமிழ்க்குரு" என்கிறது நம்பியின் பழைய திருவிளையாடல். அண்மைக் காலத்தில் சுசீந்தரம் அருகே தேரூரில் அவலோகிதர் சிலை குமரி மாவட்ட வரலாற்றாய்வாளர் எஸ். பத்மநாபனால் கண்டறியப் பட்டுள்ளது. பல்லவர் காலமா, சோழர் காலச் சிற்பமா? எந்த போதிசத்துவர் என்று அங்கே ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஆவணங்களில் தேரரூர் என்ற பௌத்தப் பெயர் தேரூருக்கு விளங்கியிருக்கிறது. தட்சிணாமூர்த்தி, அவலோகிதர் இளமைக் கோலத்துடன் துறவறத்தில் ஒழுகுவது சிற்பவிதி. அதற்கேற்பத் தேரூரில் இளையநயினார் கோவில் என்று அவலோகிதரின் கோவிலை விளிப்பது நன்கு கவனிக்கத் தக்கது. பொதிகை மலையுள்ள வேணாட்டு ஆய் குலத்து அரசன் விக்ரமாதித்த வரகுணன் என்பவன் தன்னாட்டில் திருமூலவாசம் என்னும் பௌத்த தேவாலயத்துக்கு ஒன்பதாம் நூற்றாண்டில் தானம் செய்தது செப்பேடுகளில் பதிவாகியுள்ளது. பௌத்தப் பள்ளிச்சந்தம் "மற்றும் கோயிற்குரியது எல்லாம் அகப்பட திருமூலவாதத்து படாரர்க்கு அட்டிக் குடுத்தது" என்று வரையப்பெற்றுள்ளது. மூலவாசத்தில் இருந்த அவலோகிதர் சிலை ஒன்றை 11-ஆம் நூற்றாண்டு நேபாள ஆவணங்களில் "தக்ஷிணாபதோ மூலவாச லோகநாத" என்ற குறிப்பு உள்ளது.

## முடிபுரை

பதுமக் கொத்தர், கொத்தாண்டி என்னும் இலக்கியப் பெயர்கள் பௌத்த சமய போதிசத்துவரில் ஒருவராகிய பத்மபாணி அவலோகிதருக்குப் பொருந்துவன. பல்லவ அரசர்கள் காலத்தில் தொடங்கிச் சிவபிரானது பல குணாம்சங்கள் அவலோகிதேசுவரருக்கு ஏற்றப்பட்டு விட்டன. தென்னகம், ஈழம், தென்கீழ் ஆசிய நாடுகளில் உள்ள சிற்பங்களும், இலக்கியங்களும் அவலோகிதன் பெருமை பேசுகின்றன. தாமரைப் பூவை வைத்திருப்பவர் என்று தேவாரப்பாடல்கள் குறிப்பதும் சிற்ப சாத்திரங்கள் வரையறுக்கும் தட்சிணாமூர்த்தி அல்லது அவலோகிதரைச் சுட்டுகிறது. அவலோகிதர், தக்கிணாமூர்த்தி சிலைகளில் பதும மலரைத் தாங்கும் கடக ஹஸ்த முத்திரையுடன் அமைப்பதும் வழக்கம். இராஜலீலாசனமும் இருவருக்கும் உள்ள தொடர்பை வலுவாக்குகிறது. தமிழைப் பொதிய மலையில் போதிப்பது அவலோகிதர், சிவனார் என்று பௌத்தரும், சைவரும் முறையே உரிமை

கொண்டாடுகின்றனர். பொதிய மலைதான் கண்டவியூகமும், யுவான் சுவாங் பயணக் குறிப்பும் கூறும் சமுத்திரம் அருகே உள்ள நெடிதுயர்ந்த மணிகள் கொண்ட போதலமலை ஆகும். அவலோகிதன் வாழும் பொதல மலைக்கான பௌத்த சமயக் குறிப்புகள் போன்றே தென்மொழியில் பெருங்கதையில் கொங்குவேளிரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், வடமொழியில் பாரதமும், மதுராஜ யோகியும் பொதிய மலைக்கே விவரித்து இருப்பதால் இவ்வுண்மை தெளிவாகிறது.

18-9-2004

## ஆய்வுக் குறிப்புகள்

(1) "ஆயும் குணத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு
ஏயும் புவனிக்கு இயம்பிய தண்டமிழ் ஈங்கு உரைக்க
நீயும் உளையோ எனில் கருடன் சென்ற நீள் விசும்பில்
ஈயும் பறக்கும் இதற்கு என்கொலோ சொல்லும் ஏந்திழையே"
(அவையடக்கம் – வீரசோழியப் பாயிரம்)

"பன்னூறாயிரம் விதத்தில் பொலியும் புகழ் அவலோகிதன்
மெய்த்தமிழ்" (கிரியாபதப் படலம் – வீரசோழியம்)

மேலும், வீரசோழியப் பாயிரச் செய்யுள் ஒன்று நூலாசிரியர் விவரம் தருகிறது:

மிக்கவன் போதியின் மேதக்கிருந்தவன் மெய்த்தவத்தால்
தொக்கவன் யார்க்குந் தொடர ஒண்ணாதவன் தூயனெனத்
தக்கவன் பாதந் தலை மேல் புனைந்து தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன் புத்தமித்திரனே.

(2) "தெய்வ மகள் என் மருமகள் வள்ளி வதுவை
மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லும்
இனியதொரு கதை சொல்லு" - தக்கயாகப் பரணி

(3) "நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி - அறிவானாம்
ஆலமர நீழல் அறம்நால்வர்க் கன்றுரைத்தானை
ஆலமர் கண்டத்து அரன்" - பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி

(4) *பிரமன் - அவலோகிதன் ஆதி தொடர்புகளை அறிய:*
Lokesh Chandra, The Thousand-armed Avalokitezvara,
New Delhi, 1988, especially Ch. 2 (pp. 18-28): "The Origin
of Avalokita-svara/Avalokit-ezvara."

(5) Lokesh Chandra, ODDiyAna: a new interpretation,
(L. Sternbach felicitation volume, part I, Lucknow, 1979)
"the acculturation of 'Siva into Buddhist tradition
may have takenplace in South India and thence it was
transmitted to Indonesia where 'Siva-Buddha syncretism was
deeply entrenched."

(6) "Among the earliest images of Avalokitesvara known to us from Sri Lanka are the bronzes from Jetavana and Giridara. The first example from Jetavana (Pl. 21A) shows the Bodhisattva seated in the stance which may be described as a combination between the maharaja lilasana and lalitasana of Indian iconography, similar to that frequently assumed by 'Siva Jnana-Dakshinamurti and Aiyanar in South Indian sculpture. The right hand, raised in the katakahasta, holds a lotus bud while the left hand is pressed on the throne to give support to the body." (page 61, Nandana Chutiwongs, The iconography of Avalokitesvara in mainland South East Asia, 2002, Delhi, 385 p.)

*பல்லவர் கலையே இலங்கையின் அவலோகிதேசுவரர் கல், செப்புச் சிற்பங்களுக்கு அடிப்படை மாதிரிகள் என்று ஆராய்ந்து அறிவிக்கும் நூல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவற்றில் சில:*


a) Dohanian, Diran Kavork,
The Mahayana Buddhist sculpture of Ceylon,
New York : Garland Pub., 1977.

b) Dohanian, D. K.
Sinhalese sculptures in the Pallava style,
Archives of Asian art, Vol. XXXVI (1983), pp. 6-21, 23 plates.

c) Holt, John C.
Buddha in the crown : Avalokitesvara in the Buddhist traditions of
Sri Lanka, Oxford University Press, 1991, 269 p.

(7) “ Gandavyuha interests us because it mentions a number of places in the Dravida country which if properly identified, will throw some light on the history of South Indian Buddhism.

The work also mentions certain Buddhist scholars of the Dravida country and the Deccan. Sudhana, during his wanderings in search of perfect happiness, goes from person to person. Haraprasad Sastri writing on the same work, says “Sudhana was again disappointed. He was directed to proceed to Vajapuri, a city of the Dravida country, to receive instructions from a Dravidian named Megha. Megha professed his ignorance of the Bodhi knowledge. Then several places in the Dakshinapathe are mentioned, including Mt. Potalaka, which is the same as Huan Chiang. Sudhana received several lessons from various people inclusive of a Brahman, Siriratra of Dharmagrama in Deccan.

Unless a very detailed study is made of Gandavyuha with the aid of the original text, it is difficult to identify all the places in South India mentioned therein.”

(p. 119-120, Dr. C. Minakshi (1905-1940), Buddhism in South India, pp. 83-121, reprinted in R. Nagaswamy (ed.), South Indian Studies-II, Madras, 1979).

(8) Th. Watters, On Yuan Chwang's travels in India, 1905, 2.229 mentions: "From Kanchi city he went south above 3000 li to the Mo-la-ku-ta country. […] In the south of the mo-lo-kuta (malakUTa) country near the sea was mo-lo-ya (malaya) mountain, lofty cliffs and ridges and deep valleys and gullies, on which were sandal, camphor and other trees. To the east of this was the pu-ta-lo-ka (potalaka) mountain with steep narrow paths over its cliffs and gorges in irregular confusion; on the top was a lake of clear water, whence issues a river which on its wayto the sea, flowed twenty times round the mountain. By the side of the lake was a deva place frequented by kuan-tzu-tsai-p'usa (avalokitezvara). Devotees, risking life, brave water and mountain to see the P'usa, but only a few succeed in reaching the shrine. To the people at the foot of the mountain who pray for a sight of the P'usa, he appears sometimes as a pAzupata tIrthika, or mahezvara, and consoles the suppliant with his answer."

S. Beal, Si-yu-ki, Buddhist records of the Western world, 1884, 2.233 mentions: "To the east of the Malaya mountains is Mount Po-ta-lo-kia (Potalaka). The passes of this mountain are very dangerous; its

sides are precipitous, and its valleys rugged. On the top of
the mountain is a lake; its waters are clear as mirror. From
a hollow proceeds a great river which encircles the mountain
as it flows down twenty times and then enters the southern sea,
By the side of the lake is a rock-palace of the Devas. Here
Avalokitezvara in coming and going takes his abode. Those
who strongly desire to see this Bodhisattva do not regard
their lives, but, crossing the water (fording the streams), climb

the mountain forgetful of its difficulties and dangers; Of those
who make the attempt there are very few who reach the summit.
But even of those who dwell below the mountain, if they earnestly
pray and beg to behold the god, sometimes he appears as
Tsz'-tsai-t'ien (Izvara deva), sometimes under the form of a yogi
(a Paazupata); he addresses them with benevolent words and then
they obtain their wishes according to their desires."

(K. A. Nilakanta Sastri, in his Foreign notices of South India, 1939 and in Proc. of the Transactions of the sixth All India Oriental conference, p. 173-179 claims that Mo-la-ku-ta of the Chinese records is the contemporary Pandyan kingdom. Pasupatha inscriptions belonging to 10th century have been found in Kurraalam at the Pothikai foothills,)

(9) MadhurAja Yogin, disciple of Abhinavagupta, compares his Guru
to DakshiNaamuurti. In this dhyAnaslokam, Dakshinamurti's
relations to Pandya country are referred. Madhuraja Yogin prays:
"May the glorious god DakSiNAmUrti (Abhinavagupta), who is an
incarnation of 'Siva protect us! Out of his deep compassion
he has taken a new bodily form and come to Kashmir. He sits in
the middle of a garden of grapes, inside a pavillion made of crystal
and filled with beautiful *paintings*. The room smells wonderful
because of flower garlands, incense-sticks and (oil)-lamps.Its walls
are smeared with *sandal-paste* and other such things. The room
is constantly resounding with musical instruments, with songs
and with dancing. There are crowds of Yoginis and realized beings,
*siddhas* with magic powers. Its is equipped with a golden seat
from which *pearls* are hanging. ..."
p. 46, P. E. Muller-Ortega, The triadic heart of 'Siva: Kaula
tantricism in the Non-Dual Shaivism of Kashmir, SUNY.

(Note that inscriptions with grants from Kashmirishave been found near Pothikai mountain. In the above poem, note the presence of i) sandal paste ii) pearls iii) Hall of Paintings and iv) Siddhas:

(i) sandal-paste is a special product of Malaya mountain in Pandya country
(ii) pearls, often Sanskrit texts talk of pearl production in Pandya country
(iii) a tropical garden and a pavillion of paintings. Among Nataraja's five dancing halls, Malaya (Potiyil) has citra-sabhA. Even today there is a "Hall of Paintings". (with Nayak era paintings, painted on earlier Pandya ones).
(iv) Siddhas - Potiyil is a special dwelling place of Siddhas. So, M. Yogin is most likely aware that Dakshinamurti form of 'Siva comes from the South. And, he gives recognition to the Pandya realm while describing Dakshinamurti. )

Mahabharata Vanaparvan records: "..in the land of the pANDyas the Fords-of-agastya and varuNa: there too are the Holy-Maidens said to be, bull among men. I shall now mention the tAmraparNI, listen, kaunteya, where the Gods, longing for a great reward, did austerities. GokarNa is celebrated in the three worlds, bhArata, holy and auspicious, my son, and the water is cool and abundant there. There is a lake of extremely difficult access to people who have not perfected their souls. There too is the holy hermitage of agastya’s pupil tRNasomAgni on Mount devasabhA, with plenty of fruit and roots. There is the propitious and illustrious Mount vaiDUrya, which is made of precious stones, and agastya’s- hermitage with abundant roots, fruit, and water." (Compare PeruGkatai, Sundarar Tevaram, Chinese records on the jewels, maNi and Pothikai).

---------------------------------------------------------------------------------------

Comments and suggestions are welcome. They can be sent to
naga_ganesan@hotmail.com